AK நாடகக்குழுவின் ராணி-கலா கதை நேரத்தின் ஒரு பகுதியைக் கண்டு கீழ்காணும் பயிற்சிகளை செய்து பார்க்கவும்.

## முன்னுரை

வில்லு பாட்டு ஒரு பண்டைய இந்திய பாரம்பரிய கலை. இசை வழி கதை சொல்லும் வடிவம் குதூகலமான ஒன்று. இசையுடன் நடனமும் வர்ணனையும் கலந்த இந்த கலை பொதுவாக கோவில்கள், கிராம சதுரங்கள் போன்ற இடங்களில் நிகழ்த்தப்படுகிறது. இன்றைய காலக்கட்டத்தில் வடிவம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. நவீன நடனம் மற்றும் நீங்கள் விரும்பும் அனைத்தும் உள்ளடங்கும்.

இந்த நவீன வில்லுப் பாட்டு காணொளியைக் கண்டு வில்லுப் பாட்டைப் பற்றி மேலும் தெரிந்துக்கொள்ளுங்கள். பிறகு, கீழ்காணும் பயிற்சியை செய்துப்பார்க்கவும்.

## பயிற்சி 1:

ஒரு வில்லு பாட்டு குழுமம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது. காணொளியில் நீங்கள் கண்டறிந்த அம்சங்கள் அருகில் "✔" இடவும்.

| | |
|---|---|
|  முக்கிய கதை சொல்பவர்கள் | |
|  கூட்டாக பாடுதல் | |
|  வில்லு: : ஒரு வில்லுடன் இணைக்கப்பட்ட ஒருசரம் மணிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. | |
|  பாட்டுடன் சேர்ந்து தாள வாத்தியங்கள் | |

No part of this material may be reproduced in any other form without permission from The Esplanade Co. Ltd.

## பயிற்சி 2:

இந்த படைப்பு சங் நீலா உத்தமனைப் பற்றியது. அவர் சிங்கப்பூரை எப்படி கண்டுப்பிடித்தார் என்பதையும் பிரதிபலிக்கிறது. இந்த சதி தருணங்களைச் 1 - 8 என்று சரியான வரிசையில் வகை செய்யுங்கள்.

| | | |
|---|---|---|
| a. | சங் நீலா உத்தமன் ஒரு கல்லில் நின்று தூரத்தில் ஒரு அழகான தீவைக் கண்டார் | |
| b. | சங் நீலா உத்தமன் மற்றும் அவரது இராணுவம் ஒரு புயலை எதிர்கொள்கின்றனர் | |
| c. | சோகத்தில் ஆழ்ந்த சங் நீலா உத்தமன் ஒரு பாறையில் அமர்ந்து சிந்திக்கத் தொடங்கினார் | |
| d. | சங் நீலா உத்தமன் சிங்கத்தை கண்டதும் அத்தீவுக்கு சிங்கப்பூர் என்று பெயர் சூட்டினார் | |
| e. | சங் நீலா உத்தமன் வேறு வழி இல்லாமல் கடல் சூறாவலியை நிறுத்த தன் கிரீடத்தை கடலில் வீசினார் | |
| f. | சங் நீலா உத்தமன் தனது இராணுவத்துடன் தீவை நோக்கிப் பயணிக்கிறார் | |
| g. | சங் நீலா உத்தமன் ஒரு விசித்திரமான விலங்கை சந்தித்தார் | |
| h. | கடல் அமைதியடைந்தவுடன் அவர்கள் அந்த அழகான தீவைச் சென்றடைகிறார்கள் | |

பதில்: a. 2, b. 4, c. 1, d. 8, e. 5, f. 3, g. 7, h. 6

No part of this material may be reproduced in any other form without permission from The Esplanade Co. Ltd.

## பயிற்சி 3:

பாரம்பரிய வில்லு பாட்டு பின்வரும் கூறுகளைக் கொண்டுள்ளது:

1. பார்வையாளர்களுக்கு வாழ்த்துக்கள்
2. கதைச் சுருக்கம்
3. ஆடல், பாடல், நடித்தல்
4. பார்வையாளர்களுக்கு நன்றி கூறி விடைபெறுதல்

இந்த கலை வடிவம் நவீனமும் புதுமையும் கலந்தது. இன்றய காலத்திற்கு ஏற்புடியது. இது பார்வையாளர்களை மகிழ்விக்க பல நவீன யுக்திகளை கொண்டுள்ளது. இது எவ்வாறு செய்யப்படுகிறது என்பதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கொடுங்கள்:

1. ___
2. ___

பதில்: (1. பிரபல தமிழ் திரைப்பட பாடல்கள், 2. இந்நிகழ்ச்சி உட்புறங்களில் நிகழ்த்தப்பட்டது)

## பயிற்சி 4:

இக்கதையில் பிரபல தமிழ் படப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அப்பாடல்கள் என்னவென்று உங்களால் கண்டுப்பிடிக்க முடியுமா?

1. வேட்டை மன்னர் சங் நீலா உத்தமனை அறிமுகப்படுத்தும் பாடல்

   பாடல் தலைப்பு ________ படத்தின் பெயர் __________

2. சங் நீலா உத்தமனுக்கும் அபூர்விலங்கிற்கும் இடையே ஏற்படும் வாக்குவாதம் காட்சி

   பாடல் தலைப்பு ________ படத்தின் பெயர் __________

பதில்:

1. *மரண மாஸ், பேட்ட.*
2. *ரௌடி பெபி , மாரி 2.*

No part of this material may be reproduced in any other form without permission from The Esplanade Co. Ltd.

## பயிற்சி 5:

### இப்போது உங்கள் சுற்று!

கீழே உள்ள படத்தின் அடியில் ஒரு சிறுகதையை எழுதுங்கள். அதை உங்கள் வகுப்பு தோழர்களிடம் பகிர்ந்துக் கொள்ளுங்கள். கதையில் உங்களுடைய அபிமான தருணத்தை விளக்கி உங்களுக்கு பிடித்த தமிழ் பாடலையும் சேர்க்கவும்.



(*ஆர்ட்வாக் லிட்டில் இந்தியாவின்* ஒரு பகுதியாக பாரம்பரிய சுவரோவியங்கள், சைஃபூல்)

https://www.roots.sg/Content/Places/landmarks/little-india-heritage-trail-serangoon-in-the-1900s/Mural-of-Traditional-Trades-of-Little-India-by-Psyfool

கலைகளைப் பற்றி மேலும் அறிய ஆர்வமா? மேலும் தகவல்களை அறிந்துகொள்ள, **www.esplanade.com/offstage/schools** என்ற இணையத்தளத்தை நாடுங்கள்.

No part of this material may be reproduced in any other form without permission from The Esplanade Co. Ltd.